# COVID-19 வள ஆதாரங்கள்

**தனிமைப்படுத்தலில் வீட்டு வன்முறை**:
தனிமைப்படுத்தலில் தவறாக நடத்தப்படுவதும் வன்முறையும் அதிகரிப்பதை நாங்கள் அறிகிறோம்.
சேவையாற்றுவதற்கென்றே API Chaya பிரத்யேகமாகத் திறந்துள்ளது. பலரும் அதிகளவில் வீட்டில் இருப்பதையும், சமூகத்துடன், வேலை மூலம் பெறும் பிற வளங்களுடன் மற்றும் பிற அன்றாட நடைமுறைகளுடன் (வேலைக்காக பயணிப்பது, உடற்பயிற்சிக்கூடம், சமுகச் செயல்பாடுகள் போன்றவை) குறைவான தொடர்பு இருப்பதையும் நாங்கள் அறிவோம். நமது மனநலம், ஆன்ம நலம் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதையும் அவை ஒன்றுடனொன்று தொடர்புள்ளதையும் நாங்கள் அறிவோம். ஊனமுற்றோர் சமூகங்கள் பராமரிப்பு வலையமைப்புகளையும் வள ஆதாரங்களையும் பல காலமாக உருவாக்கி வந்துள்ளன என்பதையும் அந்த மரபார்ந்த வழியில் எங்கள் பணி தொடர்வதையும் அறிவோம்.

API CHAYA திறந்துள்ளது

தொலைவழிச் செயல்பாடுகளுக்கு நாங்கள் நகர்ந்துள்ளோம். எங்கள் பிரத்யேக எண் (1-877-922-4292) மற்றும் அலுவலக எண் (206-467-9976) ஆகியவற்றில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 முதல் பின்மதியம் 4 வரை எங்களைத் தொடர்புகொள்ளலாம்.
வேலை நேரத்துக்குப் பிறகான வள ஆதாரங்கள்:
National Domestic Violence Hotline: 1-800-799-7233
King County Sexual Assault Resource Center: 1-888-998-6423
National Human Trafficking Hotline: 1-888-373-7888
ஒரு சமூகமாகக் கூட்டு பராமரிப்பு நடைமுறையைச் செயல்படுத்துவதைத் தொடர்கிறோம். இந்த வள ஆதாரம் இந்த நடைமுறையை ஆதரிக்குமென்று நம்புகிறோம்.

**சைனாடவுண்/சர்வதேச மாவட்டத் தொழில்களுக்கான ஆதரவு:**
அயல்நாட்டவர் மீதான பாரபட்சம் மற்றும் ஆசிய அமெரிக்கத் தொழில்களைச் சுற்றிலும் களங்கம் ஏற்படுத்துதல் ஆகியவை சியாட்டிலின் சைனாடவுண்-சர்வதேச மாவட்டத்திலுள்ள சிறு தொழில்களை, உணவு விடுதிகளை ஆதரிப்பதிலிருந்து மாதக்கணக்கில் மக்களை விலகச் செய்துள்ளது.

சில தொழில் உரிமையாளர்கள் 60% வியாபாரம் குறைந்துவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். சில உரிமையாளர்கள் பணியாளர்களை நீக்குவதற்கு அல்லது கதவை இழுத்து மூடுவதற்கு கடினமான உரையாடல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
வருகைதருதலும் AAPI தொழில்களை ஆதரிப்பதும் அதேநேரம் வியத்தகு நிறுவனங்களில் பொருட்களை வாங்குவதும் உணவுண்பதும் மட்டுமே ஆசிய

எதிர்ப்புக் களங்கத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதில் நாம் அனைவரும் செய்ய வேண்டியது.

**APA Labor Alliance வள ஆதாரங்கள்**:
வாஷிங்டன் மாகாணத்தில் அனைத்து பொதுப் பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் தொடர்ந்து தொகை வழங்கப்படும். எனினும், ஊதியத்துடன் கூடிய நோய் விடுப்பு மற்றும் போதிய உடல் நலக் காப்பீட்டுப் பாதுகாப்பை அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்க மத்திய அரசின் கொள்கைகள் உத்தரவாதம் தராததால், பல பணிபுரிவோர் CDC-ன் வழிகாட்டுதலைப் பின்பற்றி நோயுற்றபோது வீட்டில் இருப்பது தடுக்கப்பட்டுள்ளது.

APALA-ன் கருவிப்பெட்டியை அதன் முழுமையோடு இங்கே பார்க்கலாம்.
AFL-CIO-ன் COVID-19 தீவிரப் பரவல் வள ஆதாரங்களையும் பார்க்கலாம்.

**தனிநபர்களுக்கான பொருளாதார ஆதரவு: படிவங்களை நிரப்புவதில் மொழி உதவி:**
COVID-19 ஆதரவுக்குத் தகுதிபெற அவசியமான படிவங்களையும் விண்ணப்பங்களையும் நிரப்பவும் Chinese Information Service Center உதவமுடியும். அவர்களது இணையபக்கமான https://cisc-seattle.org/covid19/ பக்கத்திற்கு வந்து வள ஆதாரங்களை அணுகவோ அல்லது உங்களுக்கு உதவக்கூடிய பணியாளரை நேரடியாக தொடர்புகொள்ளவோ செய்யலாம்.